நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## MC. No.14/2024

## R.W.1 –ன் வாக்குமூலம்

**(எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராகேஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்லப்பன் |
| கிராமம் | : | சரவணம்பட்டி |
| வட்டம் | : | கோவை |
| மாவட்டம் | : | கோவை |
| சாட்சி வரிசை எண் | : | **RW1** |
| வயது | : | 34 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுலை மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இருதரப்பினர் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 5.30 PM

1. எனது அப்பா செல்லப்பன் என்பவருக்கு ஆகும் மாதாந்திர மருத்துவ செலவுகளுக்கான இரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். 02.05.2026 ம் தேதியிட்ட மருந்துகள் வாங்கியதற்கான இரசீது **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 02.05.2026 ம் தேதியிட்ட சிறுநீரக பரிசோதனைக்கான கட்டண இரசீது **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.05.2026 ம் தேதியிட்ட மருத்துவருக்கு செலுத்தப்பட்ட கட்டண இரசீது **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எனது அப்பாவின் 02.05.2026 ம் தேதியிட்ட இரத்த பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை அறிக்கை முறையே **எ.ம.சா.ஆ.5 மற்றும் எ.ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மேற்படி என்னுடைய சம்பள பட்டியலின் ஒளியச்சு நகல்களை தாக்கல் செய்கிறேன்.( **அது கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் சம்மதத்துடன் டிசம்பர் 2025, ஜனவரி 2026, பிப்ரவரி 2026 ஆகியவை எ.ம.சா.ஆ.7 முதல் எ.ம.சா.ஆ.9** வரையிலான சான்று ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது.)

**( எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வங்கி கணக்கு அறிக்கை ஒளியச்சு நகலாக உள்ள சூழ்நிலையில் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறியீடு செய்ய மறுப்பு தெரிவித்ததால் குறியீடு செய்யப்படவில்லை. )**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.1/2024 என்ற எண்ணில் விவாகரத்து வழக்கு நான்தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் எனது வழக்கறிஞராக தீபக்குமார் என்பவரை நியமித்துள்ளேன். அவர் எனது அத்தை மகன் ஆவார். எனது மனைவி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.20/2024 என்ற எண்ணில் சேர்ந்து வாழக்கேட்டு மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது மனைவியின் வழக்கறிஞர் S.அனீப் ஆகிய நீங்கள்தான்.
2. எனது மனைவியின் வழக்கறிஞராகிய உங்களை நான் நீதிமன்றத்தை தவிர வேறு எங்கும் பார்த்ததில்லை. நீங்கள் என்னிடம் தொலைபேசியில் பேசியதில்லை. என்னை தனிப்பட்ட முறையில் நீங்கள் அணுகி என்னிடம் பேசியதில்லை. நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். நான் சொன்ன விவரங்களைதான் எனது வழக்கறிஞர் தட்டச்சு செய்துள்ளார்.
3. 1 ம் மனுதாரர் எனது மனைவி என்பதையும், 2 ம் மனுதாரர் எனது மகன் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். நான் எனது மனைவியை

காதலித்துதான் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான். நாங்கள் காதலிக்கும்போது கொளத்தூரில் அருகருகேதான் குடியிருந்தோம். எனது மனைவியைவிட எனக்கு 10 வருடம் வயது அதிகம். மேற்படி விவரங்களை தெரிந்துதான் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம்.

4. எங்களது திருமணம் இருவீட்டாரின் சம்மதத்துடன்தான் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக இன்போசிஸ் நிறுவனத்தில் நான் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். அங்கு வேலையில் இருந்தபோது Manson ல் குடியிருந்தேன். திருமணத்திற்கு முன்னால் அந்த நிறுவனத்தில் நேரடியாக பணியில் இருந்தேன்.
5. எனது அப்பா கொளத்தூர் சுந்தராம்பாள் கேஸ் ஏஜென்சியில் எனது திருமணத்திற்கு முன்பாக தனது பொறுப்பில் சம்பளத்திற்காக நடத்தி வந்தார். கொளத்தூர் சுந்தராம்பாள் கேஸ் ஏஜென்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் G.K. மணி என்பவருடைய உறவினர் உடையது என்றால் சரிதான். நானும், மேற்படி G.K. மணியும் உறவினர்கள் என்றால் சரிதான்.
6. தற்போதும் மேற்படி கேஸ் ஏஜென்சியை எனது அப்பாதான் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். தற்போது எனது அப்பா கேஸ் ஏஜென்சிக்கு இருச்சக்கர வாகனத்தில் போவதுதான் வழக்கம். எங்களது வீட்டில் நாங்கள் வைத்திருக்கும் காரின் பதிவெண் TN 93 D 4255 கொண்ட மாருதி Breeza கார் ஆகும். மேற்படி காரை எனது அப்பா கடந்த 5 வருடங்களாக பயன்படுத்தி வருகிறார். அந்த கார் புதியதாக நாங்கள் வாங்கியதுதான்.
7. எனக்கு உடன்பிறந்த மூத்தசகோதரர் பெயர் ரகுராம் ஆகும். நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டை பிறவிகள் என்றால் சரிதான். எனது சகோதரர் பெங்களூரில் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் சுமாராக மாதம் ரூ.6,00,000/- வரை சம்பளமாக வாங்குகிறார். அவரும் நான் எவ்வாறு எனது பெற்றோரை பார்த்து கொள்கிறேனோ அதேபோல் அவரும் பார்த்து கொள்கிறார். எனது பெற்றோரும் பெங்களூரில் உள்ள எனது அண்ணன் வீட்டிற்கு போய் வருவது வழக்கம்.
8. எங்களது திருமணம் யாருடைய அழுத்தத்தின் பேரிலும், தூண்டுதலின் பேரிலும், துன்புறத்தலின் பேரிலும் நடைபெறவில்லை, இருவரும் விருப்பப்பட்டுதான்

திருமணம் செய்து கொண்டோம். நான் தாக்கல் செய்துள்ள மூன்று மாத சம்பளப்பட்டியல்களில் டிசம்பர் மாதம் ரூ.42528/- பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்னதாக மற்றும் அதற்கு பின்னிட்டு நான் பெற்ற சம்பளங்கள் குறித்து சம்பளப்பட்டியல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. எனது அப்பாவின் மருத்துவ செலவு ரசீதுகள் 02.05.2026-ம் தேதியிட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்ட மருத்துவ செலவுகள் குறித்த ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவ ஆவணங்கள் ஒருநாள் பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கானது என்றால் சரிதான். உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த மருத்துவ ஆவணங்களில் மருத்துவர் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டதாக இல்லை என்றால் சரிதான்.

**(மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது)**

**விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 06.05 P.M.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**